# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவஞ்சல் ஒப்புதலுடன் :



## நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர்

ச.அண்ணாதுரை. பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை மாவட்டம்,
27, மணலூர்பேட்டை சாலை,
திருவண்ணாமலை – 606 601.
தொலைபேசி – 04175–290344.
emaild–dtcp.tiruvannamalai@gmail.com

பெறுநர்

தலைவர்,
அரியப்பாடி ஊராட்சி,
ஆரணி ஊராட்சி ஒன்றியம்,
ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

ந.க.எண்.964/2022/தி.மலை

நாள்.27.05.2022.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருவண்ணாமலை மாவட்டம் – ஆரணி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் – அரியப்பாடி ஊராட்சி / கிராமம் – சர்வே எண்கள்.533/7எ–ல் 1.36 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர், கடிதம் மற்றும் அதன் இணைப்புகள், பெறப்பட்ட நாள்.12.04.2022, 27.05.2022 மற்றும் 26.05.2022 (இணையதள விண்ணப்பம் எண்.20220650101439, நாள்.28.02.2022).
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.29.04.2022 மற்றும் 26.05.2022.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள். 24.12.2020.
4. அரசாணை(நிலை)எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.06.2004.
5. அரசாணை(நிலை)எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.05.2017.
6. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
7. இணை இயக்குநர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் கடித எண்.ஈ/4321/2021, நாள்.20.04.2022.
8. அரசாணை(நிலை)எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.23.09.2020.
9. அரசாணை(நிலை)எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்1383/2017/LA1, நாள்.08.09.2017.

– – –

பார்வை 1–ல் சுட்டிய மனுதாரரின் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக 29.04.2022 நாளிட்ட கடிதம் மூலம், சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீட்டிற்கான வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1–ல் சுட்டிய 26.05.2022 தேதியிட்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, தானப்பத்திர எண்.4503/2022, நாள்.25.05.2022–ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிவிற்கு இணைப்பில் கண்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/மா.ந.ஊ.உ.இ(தி.மலை)எண்.138/2022</u> என எண்ணிடப்பட்டு, இரண்டு அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன், அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.
2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை :</u>

1. (a) பார்வை 5–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6–ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)–ன்படியும், மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads. Storm water drains and street lights form the applicants". After collecting the necessary fees the final layout sketch. Permit of Planning Authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning Authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும், (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ன்படி, EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்த வருவாய் ஆவங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O(Ms)No.112, Housing and Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி, நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின்படி, திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், விதி என்.3-ன்படி, கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ம் மற்றும் விதி எண்.9-ன்படி, இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

S. [signature] 27/05/2022
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
[initials] 27/5/22

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் - 2 தொகுப்பு.
2. தான பத்திர அசல்-1.

நகல் :

1. மனுதாரர்,
   தி/ள்.S.பூபால் மற்றும் R.சிவக்குமார்,
   கொல்லைமேடு,
   காட்டுக்காநல்லூர்,
   திருவண்ணாமலை - 632 312.
2. THE CHAIR PERSON,
   Tamil Nadu Real Estate Regulatory Authority,
   CMDA Tower – II, 1st Floor, No. 1A,
   Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai – 600 008.
   (மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளுடன்).
3. பதிவறை (மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளுடன்).

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை.</u>

ந.க.எண்.964/2022/தி.மலை நாள்.27.05.2022.

ம.வ/மா.ந.ஊ.உ.இ(தி.மலை) எண்.138/2022

---

**மனைப்பிரிவு நிபந்தனைகள் :**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளில் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay ) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், மேலும், மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR–2019–ல் Residential use–ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்தி கம்பி பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய தலைவர், அரியப்பாடி ஊராட்சி, ஆரணி ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம், பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர், சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி, நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால், பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் இரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல், மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| வ. எண் | விவரம் | - | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 0.55.00 ஹெக்டேர் அல்லது 1.36 ஏக்கர் |
| 2 | கோரிய மனைகள் | - | 45 |
| 3 | ஒதுக்கிய மனைகள் | - | 38 |
| **பொது ஒதுக்கீடு** (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.) | | | |
| 1 | பூங்கா | - | --- |
| 2 | உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகளுடன் | - | 1559.96 ச.மீ |
| 3 | உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (Public Purpose) | - | 21.46 ச. மீ (0.54%) |
| 4 | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது (TANGEDCO) | - | 20.80 ச. மீ (0.52%) |

ர. அ[signature] 27/05/2022
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
திருவண்ணாமலை மாவட்டம்.
[initials] 28/5/22

**ஊராட்சி மன்ற தலைவர் அரியப்பாடி**

**ஆரணி ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு.M.குமரவேல் B.E.,**

கடித எண்: நாள்: / /2022

பொருள்: மனைப்பிரிவு அனுமதி அளித்தல்– திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம் – அரியப்பாடி ஊராட்சி கிராம சர்வே எண்: 533/7A–ல் (ஏக்கர் 1.36 சென்ட்) பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து உத்திரவிடல்–சார்பு,

பார்வை: 1. திரு.S.பூபால் த.பெ.சீனிவாசன் நெ.1879 கொல்லைமேடு, காட்டுக்காநல்லூர் கிராமம், ஆரணி தாலூக்கா, திருவண்ணாமலை மாவட்டம்-632312 என்பவரின் இணையதள விண்ணப்பம் எண்: 20220650101l439 நாள்: 28.02.2022

2. இணை இயக்குநர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் கடித எண்: ஈ/4321/2021 நாள்: 20.04.2022

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டம், அவர்களின் ந.க.எண்: 964/2022/தி.மலை.

4. திரு.S.பூபால் த.பெ.சீனிவாசன் என்பவர் நகர ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ள கூராய்வு கட்டணம், நன்னிலை வரி, தகவல்பலகை கட்டணம், கொடிநாள் நிதி, OSR கட்டணம் நாள்: 27.05.2022

5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் ம.வ/மா.ந.ஊ.உ.இ (தி.மலை) எண்: 138/2022 மனைப்பிரிவு நிபந்தனைகள்

6. அரசாணை நிலை எண்: 79 (Housing and urban Development (UD) 4 (3)) நாள்: 04.05.2017

7. தான பத்திரம்–தெருக்கள், உள்ளாட்சி ஒதுக்கீடு, மின்வாரிய ஒதுக்கீடு ஆவண எண்: 4503/2022, நாள்: 25.05.2022

உத்தரவு:

ஆரணி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த அரியப்பாடி ஊராட்சியில் சர்வே எண்: 533/7A ஏக்கர் 1.36 சென்ட் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி அளித்து பார்வை 5-ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் கருத்துரு அரியப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வரப்பெற்றது. மேற்படி இடத்தின் மார்கெட் மதிப்பு ரூ. 2,00,464/- என ஆரணி சார் பதிவாளரால் அளிக்கப்பட்டுள்ளது.

அரசானை (நிலை) எண்: 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.ம) 3–த்துறை நாள்: 04.05.2017-ல் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து அதனை வசூலித்து அரசு கணக்கு தலைப்பின்கீழ் வரவு வைத்து செய்ய தகுதியுள்ள மேம்பாட்டு பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் குறிப்பிட்டுள்ள நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளில் கீழ்க் குறிப்பிட்டுள்ள அரசுத் தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கூராய்வு கட்டணம் ரூபாய்.1000/– வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

0217 Urban Development
60 Other Urban Development Schemes
800 Other Receipt
AS Receipts under Land Use Conversion Charges
27 Non Taxation Fees
90 Collections
(DPC:0217-60-800-AS-2790)

மேற்படி அரசாணை மற்றும் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவினை அனுமதி அளிக்க சந்தை மதிப்பு ரூ.2,00,464/-க்கு 3 விழுக்காடு ரூ.6,014/- எழுத்தால் ரூபாய் ஆறாயிரத்தி பதினான்கு ஆகும். விண்ணப்பதாரரால் அரசுத் தலைப்பில் சலான் எண்: 20220601009682 நாள்: 01.06.2022-ல் பாரத மாநில வங்கி இணையதள மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கூராய்வு கட்டணம் ரூபாய்.1000/- எழுத்தால் ரூபாய் ஆயிரம் ரூபாய் சலான் எண்: 20220601009743 நாள்: 01.06.2022-ல் பாரத மாநில வங்கி இணையதள மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

அரியப்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண்: 18 நாள்: 16 06 2022

மேற்படி ஆவணங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும் (நகல் இணைக்க பெற்றுள்ளது) புதிய மனைப்பிரிவு அமைக்க அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

16/06/2022

தலைவர்
ஊராட்சி மன்ற தலைவர்
அரியப்பாடி ஊராட்சி
அரியப்பாடி ஊராட்சி
ஆரணி ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு:
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தி.மலை மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகள்

பெறுநர்:
திரு.S.பூபால் த.பெ.சீனிவாசன்
நெ.1879 கொல்லைமேடு,
காட்டுக்காநல்லூர் கிராமம்,
ஆரணி தாலூக்கா,
திருவண்ணாமலை மாவட்டம்-632312

நகல்: நகர் ஊரமைப்பு ஆணையர், எண்: 807, அண்ணாசாலை சென்னை-2 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டம்.
நகல்: உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), செய்யார் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர், ஆரணி ஊராட்சி ஒன்றியம்
நகல்: வட்டாட்சியர், ஆரணி
நகல்: சார்பதிவாளர், ஆரணி
நகல்: ஊ.ஆ4 இருப்பு கோப்பிற்கு.



# our services doesn't just end there

## Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

## Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

## Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

## NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

## Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate